Registered as a News Paper — பக்கங்கள் 04 — விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம் 03 — திருவள்ளுவர் ஆண்டு 2023 — புரட்டாதி 22 — (08-10-1992) — வியாழக்கிழமை — ஓசை 233

## மாணவர் அறிவியல் கழகம் முல்லையில் ஆரம்பம்

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் துணை அமைப்பாக "மாணவர் அறிவியல் கழகம்" எனும் அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது. மாணவரின அறிவியல் அடிப்படையிலான பார்வையைத் தூண்டுதலும் மேம்படுத்துதலும் என்ற இலட்சியத்தின் அடிப்படையில் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த வாரம் முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி உபஅதிபர் தலைமையில் நடைபெற்றது. கல்லூரியின் இருநூறுக்கும் மேற்பட்ட அறிவியல் ஆர்வம் கொண்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு வே அரவிந்தன் அவர்கள் மாணவர் அறிவியல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். போருக்கு ஆட்பலம் போதாது; வடபிராந்திய தளபதி தெரிவிப்பு

## ஆயுத தளபாடமும் பற்றாக்குறையாம்

[அனுராதபுரம்]

யாழ். குடா நாட்டிலுள்ள விடுதலைப் புலிகளின் பலமான நிலைகளை மேலதிக ஆட்பலம், ஆயுத தளபாடங்கள் என்பனவற்றைக் கொண்டு இராணுவத்தைப் பலப்படுத்துவதின் மூலமே வெற்றி கொள்ளலாம் என வடபகுதிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வா தெரிவித்தார்.

அனுராதபுர இராணுவச் செயலகத்தில் கடந்த ஞாயிறன்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். செய்தியாளர் மாநாட்டில் இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணாவும் உடனிருந்தார்.

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மடுக்கோயில் இன்னும் புலிகள் வசம் உள்ளது என்றார்

செய்தியாளர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், ஆனையிறவு - கட்டைக்காடு பாதுகாப்பு வலயத்தில் நடந்த சண்டையில் புலிகள் ஏராளமான ஆயுதங்களையும், இரண்டு வாகனங்களையும் கைப்பற்றிச் சென்றுவிட்டனர் என்று பதிலளித்தார்.

இதேவேளை சிங்களக் கிராமங்களில் அண்மைக்காலத்தில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து சிங்களக் கிராமங்கள் உள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா தெரிவித்தார்

## அகதிகள் நிவாரணத்தை முழுமையாகவழங்கபணிப்பு

சகல இடம்பெயர்ந்தோருக்கும், நிவாரண உதவியை மீண்டும் முழு அளவில் வழங்கும்படி சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நிதி அமைச்சுக்கு விடுத்துள்ள பணிப்புரை ஒன்றில் தெரிவித்துள்ளார். புனர்வாழ்வு, புனர்நிர்மாண, சமூகநல அமைச்சு இதையடுத்து சகல இடம்பெயர்ந்தோருக்குமான நிவாரண உதவியை இம்மாதம் பதினைந்தாம் திகதி முதல் மீண்டும் முழுமையாகவழங்கஉத்தேசித்துள்ளது

## அறிவித்தல் கிடைத்ததும் முழுஅளவில் நிவாரணம்

- அரச அதிபர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் யாழ் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான முழு அளவிலான உலர் உணவு நிவாரண விநியோகம் மிகவிரைவில் மீண்டும் நடைமுறைப்படுத்தப் படஉள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

மேற்படி உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் முழு அளவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிவாரணத்தை வழங்குவதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் இதுவரை யாழ் செயலகத்துக்கு கிடைக்கவில்லை இவ் அறிவித்தல் கிடைத்ததும் அதன் அறிவுறுத்தல்களுக்கமைய உலர் உணவை மீண்டும் வழங்குவதற்கு தாம் துரித நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

## நிவாரண விநியோகம்; சீனிக்குப் பதில் பயறு

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு விநியோகத்தில் சீனிக்குப் பதிலாகப் பயற்றம் பருப்பு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புரட்டாதி மாதத்திற்கான இரண்டுகட்ட நிவாரண வழங்கலின்போது சில தினங்களுக்கு முன்னர் சீனியும் வழங்கப்பட்டுவந்தது ஆனால் தற்பொழுது சீனிக்குப் பதிலாக பயறு வழங்கப்பட்டுவருகிறது என தெரியவருகிறது.

இதுபற்றி கூட்டுறவுச் சங்கங்களிடம் விசாரித்தபோது யாழ்.செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமையவே இவ்வாறு விநியோகிக்கப்படுவதாகதெரிவித்தன

(88)

## மண்ணெய் எடுத்துவர கூட்டுறவு சங்கங்கள் முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக மேற்படி சங்க... என்ற கப்பலில் இம் மண்ணெண்ணெய் எடுத்துவரப்படஉள்ளதாக தெரியவருகிறது. இவ்விடயம் குறித்து யாழ். அரசாங்க அதிபருடனும் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது அதே வேளை யாழ்...

## காவல்துறைப் பணிமனை வல்வெட்டியில் திறப்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறைப் பகுதிக்கானபுதிய காவல்துறைப்பணிமனை நேற்றுக்காலை 7 மணிக்கு வல்வெட்டியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழக் காவல்துறையின் பாண்ட் வாத்திய இசைஒலிக்க தமிழீழ கடற்புலிகள் தளபதி திரு கங்கை அமரன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறை நிலையத்தைத் திறந்து வைத்தார்,

காவல்துறைக் கொடியைத் தமிழீழக்காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா நடேசன் ஏற்றிவைக்க, குத்துவிளக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர்கண்ணிவெடியை புலிகள் அகற்றினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆறாம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடியொன்றை புலிகள் அகற்றினர்.

கடந்த திங்கட்கிழமை கதிரவெளிக்கும் கட்டுமுறிவுக்கும் இடையில் உள்ள ஆறாம் கட்டை என்னும் இடத்தில் சிறிலங்காஇராணுவம் வாகன எதிர்ப்புக் கண்ணிவெடி ஒன்றை புதைத்து வைத்திருந்தது. இக்கண்ணிவெடியையே விடுதலைப் புலிகள் அகற்றினர்.

இவ்வீதி வழியாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும்பொதுமக்களும நடமாடுவது குறிப்பிடத்தக்கது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தயில் காவலரண் தகர்ப்பு; அதிகாரி உட்பட இருபொலிஸார் பலி

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

(மட்டக்களப்பு)

வெலிக்கந்த பிள்ளையாரடி கிராமத்தில் அடுத்தடுத்து இருந்த இரண்டு காவலரண்கள் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் இரண்டு பொலிசார் பலியாகினர்.

நேற்று அதிகாலை 3-55 மணியளவில் மேற்கொள்ளப்... ரவைகள் - 155. ஜே ஆர்.கைக்குண்டு - 01, ஏ கே. கோல்சர் 02, ஏ.கே எல்.எம் ஜி கோல்சர் 02, மில்றிபெல்ட - 05, தலைக்கவசம் - 04, கிற்பாக் 02 என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

போராளிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இதேவேளைகொல்லப்பட்ட இருவரில் ஒருவர் சப் இன்ஸ்பெக்டர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## நொச்சிமோட்டையில் அருள் 89 தாக்குதல்

வவுனியாநொச்சிமோட்டை முன்னணிக் காவலரண்கள் மீதுநேற்று விடுதலைப்புலிகள் அருள் 89 தாக்குதலை நடாத்தினர்.

இத் தாக்குதல் காலை 8 00 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது இத் தாக்குதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

## சீனிக்குப் பதில் பயறு

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு விநியோகத்தில் சீனிக்குப் பதிலாகப் பயற்றம் பருப்பு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புரட்டாதி மாதத்திற்கான இரண்டுகட்ட நிவாரண வழங்கலின்போது சில தினங்களுக்கு முன்னர் சீனியும் வழங்கப்பட்டுவந்தது ஆனால் தற்பொழுது சீனிக்குப் பதிலாக பயறு வழங்கப்பட்டுவருகிறது என தெரியவருகிறது.

இதுபற்றி கூட்டுறவுச் சங்கங்களிடம் விசாரித்தபோது யாழ்.செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமையவே இவ்வாறு விநியோகிக்கப்படுவதாகத் தெரிவித்தன (88)

## மண்ணெய் எடுத்துவர கூட்டுறவு சங்கங்கள் முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக மேற்படி சங்க அதிகாரிகள் சிலர் கொழும்பில் தங்கியிருந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர். பருத்தித்துறை துறைமுகத்திற்கு விரைவில் வந்து சேர இருக்கும் "குமண" என்ற கப்பலில் இம் மண்ணெண்ணெய் எடுத்துவரப்படஉள்ளதாக தெரியவருகிறது. இவ்விடயம் குறித்து யாழ். அரசாங்க அதிபருடனும் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது அதேவேளை யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இவ்வாறு மண்ணெண்ணெயை கப்பல்மூலம் எடுத்து வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

## தாமதத்திற்கு காரணம் களஞ்சிய வசதி இன்மையே

-யாழ். செயலகம்

காரைநகர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் போதியளவு களஞ்சிய வசதி இல்லாமையே உலர் உணவு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு காரணம் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கான புரட்டாதி மாத நிவாரணம் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமைதெரிந்ததே. இந்நிவாரணம் உரிய காலத்தில் விநியோகிக்கப்பட யாழ் செயலகத்தினால் வழங்கப்பட்டுவிட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மேலும் அரச அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## தாமதத்திற்கு காரணம் பட்டியல் வராமையே

-ப. நோ. கூ. சங்கம்

மாதா மாதம் நிவாரணப் பட்டியல் கிராம சேவையாளரால் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்தான் நிவாரணம் வழங்க வேண்டும். புரட்டாதி மாதத்திற்கு உரிய பட்டியல் தற்போது தான் கிடைத்துள்ளது. எனவே நிவாரணம் வழங்குவதற்கு ஏற்படும் சுணக்கத்திற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம் பொறுப்பு அல்ல. இவ்வாறு காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க உபதலைவர் தெரிவித்துள்ளார்.

## பௌதிகவியல் மீள்பரீட்சை வட-கிழக்கிலும் நடைபெறும்

அண்மையில் நடாத்தப்பட்ட கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தர பரீட்சையில் பௌதிகவியல் பாடத்தின் வினாத்தாள் வெளியானது தொடர்பாக குறிப்பிட்ட பாடத்திற்கான பரீட்சை மீண்டும் நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மட்டும் நடத்தப்படும் என்று வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என்று கல்விச் சேவைகள் அமைச்சர் திருமதி சுனேந்திரா ரணசிங்கா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிசில் வைத்தியரெட்ணாவும் உடனிருந்தார்.

மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தொடர்ந்து கருத்துத் ... சண்டையில் புலிகள் ஏராளமான ஆயுதங்களையும், இரண்டு வாகனங்களையும் கைப்பற்றிச் சென்றுவிட்டனர் ... பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்திய ரெட்ணா தெரிவித்தார்

## வெலிகந்தயில் காவலரண் தகர்ப்பு; அதிகாரி உட்பட இருபொலிஸார் பலி

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

(மட்டக்களப்பு)

வெலிக்கந்த பிள்ளையாரடி கிராமத்தில் அடுத்தடுத்து இருந்த இரண்டு காவலரண்கள் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் இரண்டு பொலிசார் பலியாகினர்.

நேற்று அதிகாலை 3-55 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் 10 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. இத் தாக்குதலின்போது காவலரண்கள் இரண்டும்புலிகளால் கைப்பற்றப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டன.

இக்காவலரண்களிலிருந்து வெலிக்கந்த இராணுவ முகாம் ஒரு கிலோமீற்றர் தூரத்திலும் சடவத்தமடு இராணுவமுகாம் 300 யார் தூரத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலின் போது 40 மி.மீ பிஸ்டல் - 01, 40 மி மீ ஷெல் - 11, ரி 56 மகசீன்-03 ரி 81 மகசீன் - 05, நடுத்தர ரவைகள் - 155. ஜே ஆர்.கைக்குண்டு - 01, ஏ கே. கோல்சர் 02, ஏ.கே எல்.எம் ஜி கோல்சர் 02, மில்றிபெல்ட - 05, தலைக்கவசம் - 04, கிற்பாக் 02 என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

போராளிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இதேவேளைகொல்லப்பட்ட இருவரில் ஒருவர் சப் இன்ஸ்பெக்டர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆறாம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடியொன்றை புலிகள் அகற்றினர்.

கடந்த திங்கட்கிழமை கதிரவெளிக்கும் கட்டுமுறிவுக்கும் இடையில் உள்ள ஆறாம் கட்டை என்னும் இடத்தில் சிறிலங்காஇராணுவம் வாகன எதிர்ப்புக் கண்ணிவெடி ஒன்றை புதைத்து வைத்திருந்தது. இக்கண்ணிவெடியையே விடுதலைப் புலிகள் அகற்றினர்.

இவ்வீதி வழிபாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும்பொதுமக்களும நடமாடுவது குறிப்பிடத்தக்கது.

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## நொச்சிமோட்டையில் அருள் 89 தாக்குதல்

வவுனியாநொச்சிமோட்டை முன்னணிக் காவலரண்கள் மீதுநேற்று விடுதலைப்புலிகள் அருள 89 தாக்குதலை நடாத்தினர்.

இத் தாக்குதல் காலை 8 00 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது இத் தாக்குதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

## கிளாலி, நல்லூரில் குண்டுவீச்சு; 6 பேர் காயம்; 10 படகுகள் சேதம்

(நமது நிருபர்)


கிளாலி இறங்குதுறைப்பகுதிகளில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய அகோரக் குண்டுவீச்சுகளினால்மூவர் படுகாயமடைந்ததுடன் மற்றும் மூவர் சிறுகாயங்களுக்குள்ளாகினர் பத்திற்கு மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன.

நேற்று மாலை 3 மணியளவில் கிளாலிப்பகுதியை வட்டமிட்ட இரண்டு சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் கரையோரப் பகுதிகளை நோக்கி இரண்டு குண்டுகளை வீசின இதனால் கெற்பலி கிளாலியைச்சேர்ந்த எஸ்ஜேசுதாசன் (வயது 29) என்பவர் படுகாயமடைந்தார் இவர் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இச்சம்பவத்தில் சிறுகாயங்களுக்குள்ளான இருவர் சாவகச்சேரி அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இதனையடுத்து இவ்விரு விமானங்களும் நல்லூர் ஆலங்கேணிப்பகுதியை வட்டமிட்டு இறங்குதுறை பகுதியில் மூன்று குண்டுகளைவீசின. இக்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மேஜர் கார்வண்ணன் வீரச்சாவு



வெற்றிகர மினிமுகாம் தகர்ப்பின்போது விழுப்புண் அடைந்திருந்த மேஜர் கார்வண்ணன் (பீற்றர் - சிவஞான சுந்தரம் சிவஜோதி மிருசுவில் வடக்கு மிருசுவில்) நேற்று முன் தினம் வீரச்சாவு அடைந்தார்.

ஆனையிறவு ஆகாய, கடல், வெளி போரிலும் பலவியில் நடந்த பல சமர்களிலும் பங்கு பற்றியவர் மேஜர் கார்வண்ணன்

அண்மையில் அராலித்துறையில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதலுக்குத் தலைமை தாங்கிச் சென்று சாதனை படைத்த

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## இனப்பிரச்சினைக்கு தீர்வு அரசு முன் வைக்க வேண்டும்

### -13 எதிர்க்கட்சிகள் கோர முடிவு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டுமென 13 எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை கோர விருப்பதாக தெரியவருகிறது.

அரசினைக் கோருவதற்கான மேற்படி தீர்மானத்தை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரதித்தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி எதிரணிக் கட்சிகளிடம் முன்வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

பாராளுமன்றத் தெரிவுக்கு அரசாங்கம் விரும்பினால் அதன் தீர்வு யோசனைகளை சமர்ப்பிக்கலாம். அதில் திருத்தங்கள் செய்ய வேண்டுமென்றால் அதற்கான யோசனைகளை தெரிவிக்க தங்களுக்கு வாய்ப்புக்கிட்டும் என்றும் எதிரணி வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி

( 4 ஆம் பக்கம பார்க்க )

## யாழ். குடாநாட்டிலிருந்து மக்களை வெளியேற்றுவது அரசின் நோக்காக இருக்கலாம்

- அம்பலவாணர்

(லண்டன்)

இராணுவத் தாக்குதலை அதிகரிப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்களை வெளியேற்றிவிட்டால் தாங்கள் விரும்பும் ஆட்களை இங்கு குடியேற்றிவிடலாம் என்பது அரசின் நோக்கமாக இருக்கக்கூடும் என தென்னிந்திய திருச்சபையாழ் அத்தியட்சாத்தீனர் அம்பலவாணர் பி. பி.ஸி. க்கு வழங்கிய பேட்டியில்தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் நடாத்திவரும் தாக்குதலின் இறுதி நோக்கம் புலிப்படையினரைப் பணியவைப்பதுதான் எனக் கூறப்படுகிறது. அரசிடம் வேறு திட்டங்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

கட்டைக்காட்டில் சடந்த வெள்ளியன்று இடம் பெற்ற

## கண்ணிவெடி அகற்றிய இரண்டு படையினர் பலி

### மணலாற்றில் சம்பவம்

மணலாறு மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றிக்கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் தாக்குதல் மேறகொண்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

இத் தாக்குதலில் இரண்டு படையினர் பலியாகியதாக அந்த வட்டாரங்கள மேலும் தெரிவித்தன

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு உண்டு

HIGH LINE PRIMA, BHIRA

கைலைன் வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (3325)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582 Stanley Road Jaffna. (சி 5169)

### துரித மீட்டற் பயிற்சி (ஆண்டு 5, 4)

வெளிவந்து விட்டது! பிரபல பாடசாலை ஆண்டு6 அனுமதிப் பரீட்சைக்கும், ஆண்டு5 புலமைப் பரிசில் பரீட்சைக்கும் ஏற்ற வகையில் புதிய கல்வி நிலையத்தால் புதிதாக வெளியிடப்பட்ட துரித மீட்டற் பயிற்சியை (விடைகளுடன்) புதிய கல்வி நிலையத்திலும், யாழ் நகர் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (3327)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### தவறிவிட்டது

அப்பாத்துரை சாந்தினி என்பவரது அடையாள அட்டையும் (716430634 V) எட்டு படப்பிரதிகள் அடங்கிய பேர்ஸ் ஒன்று 5-10-92 அன்று கொக்குவிலுக்கும் - வடலியடைப்புக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சங்கானை காவல்துறையிடம் ஒப்படைக்கவும். (3328)

# கச்சேரி முறை நிர்வாகத்திற்கு வருட முடிவில் முற்றுப்புள்ளி

(கொழும்பு)

கச்சேரி நிர்வாக முறைக்கு இந்த வருடம் டிசம்பர் முப்பத்தியோராந்திகதி முற்றுப் புள்ளி வைக்கப்படும் என கொழும்பில் அரசு தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிர்வாகத்தைப் பன்முகப் படுத்துப் நோக்கத்தில் பிரதேச சபைப் பிரிவுகள் தோறும் பிரிவுச் செயலகங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துவருவதால் கச்சேரி நிர்வாகமுறைக்கு அவசியம் இல்லை என உயர்மட்டத்தில் நம்பப்படுகின்றது அரசாங்கப் பணிகள் பன்முகப்படுத்துவதன் விளைவாக கச்சேரிகள் மறைந்து போகும் என பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எம். என் ஜீனைத் சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சென்ற வருடம் தேர்தல் நடாத்தப்பட்ட 195 பிரதேச சபைகளின் பிரதேசங்கள் உட்பட நாட்டில் 200 பிரிவுச்செயலகங்களை இந்த மாதத்திற்குள் நிர்வாக, பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. ஏற்கனவே 91 பிரிவுச் செயலகங்கள் நிறுவப்பட்டுவிட்டன.

இந் நிர்வாக பன்முகப்படுதல் சம்பந்தப்பட்ட சகலபணிகளையும் இந்த வருடம் டிசம்பர் 31-ம் திகதிக்குள் பூர்த்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. அதன் பின்னர் கச்சேரிகளுக்கு அவசியம் இல்லாமல் போய்விடும் என நம்பப்படுகின்றது.

அத்துடன் மாவட்டமட்டத்திலான அரசாங்க அதிபர் முறையும் இல்லாமல் போய்விடும் எனினும் மாவட்ட பாராளுமன்றத் தேர்தல்களுக்கும் மாகாணசபைத் தேர்தல்களுக்கும் அவசியப்படுவதால் மாவட்ட முறை தொடர்ந்து அமுலில் இருக்கும் இதற்கமைய மாவட்ட கூட்டிணைப்புக்குழு தொடர்ந்து தொழிற்படும் சிரேஷ்ட அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரையும் சிறு எண்ணிக்கையிலான ஊழியர்களையும் மாவட்டக் கூட்டிணைப்புக் குழுவில் சேவைபுரிய அரசு நியமிக்கும்.

அரசாங்க அதிபர்கள் செய்யும் பணிகளை பிரிவுச் செயலகங்களிற்கு பன்முகப்படுத்த அரசு தீர்மானித்து அதற்கான பணிப்புரைகளையும் விடுத்துள்ளது இதன்படி தற்போது மாவட்ட மட்டத்தில் செய்யப்படும் அரசாங்க பணிகள் யாவும் பிரிவுமட்டத்திற்கு பன்முகப்படுத்தப்படும்.

மக்களின் அன்றாட வாழ்க்கையைத் தொட்டுச் செல்லும் தொழிற்பாட்டு முயற்சிகள் யாவும் பிரிவுச் செயலகத்தில் மேற்கொள்ளப்படும். இதற்காக பல அமைச்சுக்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் பன்முகப்படுத்தப்படும்.

## இன்றைய மாணவர்கள் கவிஞராக, கலைஞராக வளர உதவ வேண்டும்

(கொழும்புத்துறை)

மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல கவிஞர்களாகவும் புனைகதை ஆசிரியர்களாகவும், கட்டுரையாளர்களாகவும் கலைஞர்களாகவும் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இலக்கியத்திறன் போட்டிகளும், தமிழ்த்தினமும் நடத்தப்படுகின்றன இவ்வாறு பாசையூர் அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற இலக்கிய தினவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் கூறினார். அவர் அங்கு மேலும் பேசுகையில் மாணவர்களிடம் இயல்பாகவே பலவகை ஆற்றல்களை மாணவர்வெளிப்படுத்தி திறமையை வளர்க்க இத்தகைய போட்டிகள் உதவிபுரியும் சிறந்த நோக்கத்துடன் வாழ்வதற்கு பண்படுத்துவதே இலக்கியத்தின் பணியாகும் என்றும் குறிப்பிட்டார்.

## கழுத்துறை நீதிமன்றத்தில் வைத்த தங்க நகைகள் பித்தளையாக மாறியது

நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் பித்தளை நகைகளாக மாறிய சம்பவம் ஒன்று கழுத்துறை நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது 1985 ஜனவரி 3 ஆம் திகதி பேருவளையிலும் அளுத்கமையிலும் உள்ள இரு வீடுகளில் திருட்டுப் போனதாகக் கருதப்பட்ட 2,63,750 ரூபா பெறுமதியான நகைகளைப் பொலிசார் கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர். ... கள் முழுவதும் பித்தளையாக மாறியிருந்தன.

தற்போது இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நீதிமன்ற பெண் லிகிதர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### தற்கொலை

இளைஞர் ஒருவர் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று உடுவில் பகுதியில் நடைபெற்றுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக மனமுடைந்த நிலையில் காணப்பட்ட சு. சிறீஸ்கந்தராசா (வயது 24) என்பவர்

## ஆடு வளர்ப்பு ஊக்குவிப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் யாழ். மாவட்டப் பகுதிகளில் நல்லின ஆடுகளை பெருக்கும் நோக்கில் பல செயற்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது.

தொல்புரம் பகுதியில் உள்ள 59 குடும்பங்களுக்கு இத் திட்டத்தின்கீழ் தலா ஒரு நல்லின ஆடு வீதம் வழங்கியது.

இவற்றினை சினைப்படுத்த வென சிறந்த இனத்தை சேர்ந்த ஆடுகள் மேலும் மூன்று குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கிய நல்லின ஆடுகளில் இருந்து பெருகிய 26 ஆடுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் தற்பொழுது பெற்றுள்ளது இதனை தென்மராட்சி கோட்டத்தில் உள்ள கிராம மொன்றுக்கு வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

இத் திட்டமானது யாழ் மாவட்டத்தில் நல்லின ஆட்டை பெருக்கவும் மக்களை ஆடு வளர்ப்பில் ஊக்குவிப்பதன் மூலம் வேலை வாய்ப்பை பெருக்கவும் ஏதுவாகின்றது.

## நோயாளர்கள் பதிவு செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து கொழும்பிற்கு கப்பல் மூலம் அதிவிசேட சிகிச்சைக்கென செல்லும் நோயாளர்களை யாழ். வைத்தியசாலையில் பெயர் விபரங்களைப் பதிவு செய்யுமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

இவர்கள் எதிர்வரும் 12-ம், 13-ம் திகதிகளில் பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது மேலும் இன்னும் சில தினங்களில் பருத்தித்துறையை வந்தடையும் ''குமாரி'' கப்பலிலேயே அழைத்துச் செல்லப்பட உள்ளனர் எனத் தெரியவருகின்றது. (பா)

உங்கள் அபிமானத்தைப் பெற்ற மக்கள் தினசரி

## ஈழநாதம் விளம்பரப் பணிமனை

வடமராட்சி மக்கள் நலன் கருதி நெல்லியடியில் இயங்குகிறது.

தொடர்புகளுக்கு:

**நவீன களஞ்சியம்**

(மொடேர்ண் ஸ்ரோர்ஸ்)

நெல்லியடிச் சந்தி, கரவெட்டி.

## பதவி வெற்றிடங்கள்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. குடிசார் பொறியியலாளர்கள் (Civil Engineers)

யாழ் பல்கலைக் கழகம்

## மகாபொல கொடுப்பனவு 9-ம் 10-ம் தவணைப் பணங்கள்

மேற்படி கொடுப்பனவுகளுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன.

முதலாம் வருடம்

| | |
|---|---|
| மருத்துவபீடம்<br>கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 08-10-92 9 00 - 12 00மு.ப<br>13-10-92 9.00 . 12 00 மு.ப.<br>16-10-92 9 00 - 12 00மு.ப. |

இரண்டாம் வருடம்

| | |
|---|---|
| மருத்துவ பீடம்<br>கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 09-10-92 9.00 - 12.00மு ப.<br>14-10-92 9.00 - 12 00 மு ப.<br>19-10-92 9.00 - 12.00 மு ப. |

நான்காம் வருடம்

| | |
|---|---|
| மருத்துவபீடம் 4-ம், 5-ம் வருடங்கள் | |
| கலைப் பிரிவு<br>வர்த்தகப் பிரிவு<br>வியாபார நிர்வாகப் பிரிவு<br>உயிரியல் விஞ்ஞானப் பிரிவு<br>பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 12 10 9_ 9 00 12.00 மு.ப.<br>15-10-92 9 00 - 12.00 மு ப<br>20-10-92 9.00 - 12.00 மு.ப. |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக அடையாள அட்டை
2. ரூபா 2/-பெறுமதியான முத்திரை

மூன்றாம் வருடக் கொடுப்பனவுகளைப் பெறத் தவறிய மாணவர்கள் அவற்றை பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(சி-5186) பதிவாளர்

மல்லாகம் பெரியதம்பிரான் தேவஸ்தான அலங்கார உற்சவ

## சங்காபிஷேக விழா

மேற்படி ஆலயத்தின் அலங்கார உற்சவ சங்காபிஷேகமும் தேவஸ்தான நாதஸ்வர வித்துவான் K நம்பிராசா அவர்களுக்கு இசைஞானவாரிதி என்ற கௌரவ பட்டமளிப்பு விழாவும் 9- 10- 92 வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கின்றது தவில் வித்துவான் கைதடி K. பழனிமலை என்பவருக்கு கரவேகலய ஞானசாம்பிறாட் என்ற கௌரவ விருது வழங்கப்படும். இவ் விழா விற்கு M விநாயமூர்த்தி தலைமை தாங்குவார் இவ் விழாவை சிறப்பிக்க இசைக்கச்சேரியும், சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இவ் விருதினை வழங்குபவர் தம்பிரான் உபாசகர் பெரியதம்பி

(3324) அருள்மிகு பெரியதம்பிரான் தேவஸ்தானம் மல்லாகம்,

## நினைவு கூருகின்றோம்...

இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்காவாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

## தவறிவிட்டது

அப்பாத்துரை சாந்தினி என்பவரது அடையாள அட்டையும் (716430634 V) எட்டு படப்பிரதிகள் அடங்கிய பேர்ஸ் ஒன்று 5-10-92 அன்று கொக்குவிலுக்கும் - வடலியடைப்புக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சங்கானை காவல்துறையிடம் ஒப்படைக்கவும். (3328)

## தேவை

கோழித்தீன் வெற்றுப் பைகள் தேவை. தொடர்பு - மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/5183)

## மரம் நடுகை ஆரம்பம்

பாடசாலைகள், பாடசாலை மாணவர்களுக்கான மரநடுகை திட்டம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது,

கோட்ட மட்டத்திலும் கொத்தணி மட்டத்திலும் பாடசாலைகளில் இம் மரம் நடுகை இடம் பெற்றது.

## வைத்த தங்க நகைகள் பித்தளையாக மாறியது

நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் பித்தளை நகைகளாக மாறிய சம்பவம் ஒன்று கழுத்துறை நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது 1985 ஜனவரி 3 ஆம் திகதி பேருவளையிலும் அளுத்கமையிலும் உள்ள இரு வீடுகளில் திருட்டுப் போனதாகக் கருதப்பட்ட 2,63,750 ரூபா பெறுமதியான நகைகளைப் பொலிசார் கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட நகைகள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் பட்டது. தற்போது விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் பட்டபோது மேற்படி நகைகள் முழுவதும் பித்தளையாக மாறியிருந்தன.

தற்போது இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நீதிமன்ற பெண் லிகிதர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## தற்கொலை

இளைஞர் ஒருவர் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று உடுவில் பகுதியில் நடைபெற்றுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக மனமுடைந்த நிலையில் காணப்பட்ட சு. சிறீஸ்கந்தராசா (வயது 24) என்பவர் தற்கொலை செய்துகொண்டவராவார் இவரது சடலம் விசாரணைக்காக போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

## பரீட்சைப் பெறுபேறு பார்வைக்கு உள்ளது

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. கடந்த செப்டம்பர் 24, 1992 டெய்லி நியூஸ் இதழில் வெளிவந்த இப் பரீட்சையில் சித்தியெய்தியோரின் பெயர்ப்பட்டியல் எமது அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மக்கள் நலன் கருதி நெல்லியடியில் இயங்குகிறது.

தொடர்புகளுக்கு:

**நவீன களஞ்சியம்**

(மொடேர்ண் ஸ்ரோர்ஸ்)

நெல்லியடிச் சந்தி, கரவெட்டி.

## பதவி வெற்றிடங்கள்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. குடிசார் பொறியியலாளர்கள் (Civil Engineers)
2. தொழில் நுட்பவியலாளர்கள் (Technical Officers)
3. சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள் - தமிழ் (Short Hand Typist's - Tamil)
4. நிர்வாக அலுவலர்கள் (Administrative Officers)
5. எழுதுவினைஞர்கள் (Clerks)
6. படவரைஞர்கள் (Draffsmen)
7. எழுத்தாளர்கள் (கதை, கட்டுரை, நாடகம், கவிதை போன்றவை தயாரித்து வெளியிடுவதற்கு) மேற்படி பதவிகளுக்கான தகைமையும், அனுபவமும் உள்ளவர்கள் 15-10-92 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 171
மே / பா ஈழநாதம்,
யாழ்ப்பாணம்.

(சி/5185)

## சங்காபிஷேக விழா

மேற்படி ஆலயத்தின் அலங்கார உற்சவ சங்காபிஷேகமும் தேவஸ்தான நாதஸ்வர வித்துவான் K நம்பிராசா அவர்களுக்கு இசைஞானவாரிதி என்ற கௌரவ பட்டமளிப்பு விழாவும் 9-10-92 வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கின்றது தவில் வித்துவான் கைதடி K. பழனிமலை என்பவருக்கு கரவேகலய ஞானசாம்பிறாட் என்ற கௌரவ விருது வழங்கப்படும். இவ் விழா விற்கு M விநாயமூர்த்தி தலைமை தாங்குவார் இவ் விழாவை சிறப்பிக்க இசைக்கச்சேரியும், சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இவ் விருந்தினை வழங்குபவர் தம்பிரான் உபாசகர் பெரியதம்பி

அருள்மிகு பெரியதம்பிரான்
(3324) தேவஸ்தானம் மல்லாகம்,

## நினைவு கூருகின்றோம்... 1992-10-08

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - நாவற்குடாப் பகுதியில் சிறிலங்கா இரகசியப் பொலிசாரின் முற்றுகையின்போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**ரமேஸ் / நாகலிங்கம்** (கணபதிப்பிள்ளை கனகலிங்கம் - நாவற்குடா, மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் விசேட அதிரடிப் படையினரால் கைதாகி, கொண்டவெட்டுவான் முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட -

★ **எஸ்** (மா. நடராசா - காலி)

1986 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **சரத்** (காளி வேலாயுதம் - பட்டித்திடல், மூதூர், திருக்கோணமலை)

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சி 10-ம் வாய்க்கால் பகுதியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். விக்கி** (பொன்னையா வரதராசா - கல்விளான், துணுக்காய், மாங்குளம், முல்லைத்தீவு)

1990 ஆம் ஆண்டு விளையூமிப் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த -

**வீரவேங்கை ஜெயா**

தமிழீழக் கடற்பரப்பில் (திருக்கோவில்) தொழிலுக்குச் சென்றபோது சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கடற்றொழிலாளி.

மட்டக்களப்பு - கருவேப்பங்கேணிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு உயிருடன் ரயர் போட்டு எரிக்கப்பட்ட 6 தமிழ் இளைஞர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5182)

நவாலி மக்களுக்கு......
உங்கள் நம்பிக்கைக்கும் சிக்கனத்திற்கும் ஏற்றவகையில்
எம்மிடம்

நெல் குற்றல்
அரிசி தீட்டல்
மாவு அரைத்தல்
தூள் திரித்தல்

எதுவானாலும் நிதானவிலையில் செய்துகொள்ள நாடுங்கள்......

**குமரன் கிறைண்டிங் மில்**

சங்கரத்தை வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி/5167)

**சிந்தனைக்கு**

உண்ணும் ஒளிவீசும் கண்கள் எனது என்றுசொல்லி
கண்ணீர் சிந்த அவற்றை நீ விடுவது ஏன்?
-டேவிட் மேல்லெட்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்-08-10-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## அன்று சொல்ல விரும்பாதவை

"பத்து இராணுவத்தினர் உயிரிழந்தால் பதினைந்து நவீன ஆயுதங்கள் புலிகளுக்குப் போய்ச் சேருகின்றன. இந்தவகையில் கணக்கிட்டால் நூறு இராணுவத்தினர் கொல்லப்பட்டால் சுமார் 150 நவீன ஆயுதங்கள் புலிகளுக்கு வழங்கப்பட்டுவிடும்" இவ்வாறு கடந்தவார சண்டே ரைம்ஸ் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. அத்தோடு இதுமாத்திரமல்லாமல், இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் என்பன குறித்தும் தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதோடு இவ்யுத்தத்திற்கு முடிவு எப்பொழுது வரும் எனவும் அங்கலாய்த்துள்ளது.

இதேவேளை இதே வார இதழில் இப்பத்திரிகையின் செய்தியாளர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் ஆசிரியர் தலையங்கத்திற்கு வலுச்சேர்க்குமாப்போல் இராணுவத்தினர் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பம் நம்பிக்கையீனம் என்பன குறித்து விவரிக்கப்பட்டுள்ளதோடு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட சிறிலங்கா கடற்படையின் படகின் படமும் சுட்டுவீழ்த்தப்பட்ட வை-8 விமானத்தின் சிதைவுகளைப் புலிகள் மக்கள் பார்வைக்கு வைத்திருக்கும் படங்களும் விடுதலைப் புலிகளால் ஏற்பாடுசெய்யப்பட்ட மக்கள்பேரணி ஒன்றின் படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும், கட்டுரையின் இறுதியில் இவ்வருட ஆரம்பத்தில் இருந்து மாதாந்த ரீதியில் யுத்தத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கையும் (அரசாங்க தகவல் அடிப்படையில்) வெளியிடப்பட்டுள்ளது.

அதாவது யுத்தத்தில் சிறிலங்கா இராணுவத்தின் இழப்புக்கள் குறித்து சிங்களப்பத்திரிகையாளர்கள் அங்கலாய்க்க தொடங்கியுள்ளனர். இது தனியாக சண்டே ரைம் சினுக்குரிய தன்மையாக மட்டும் தெரியவில்லை. அரசகட்டுப்பாடில் இல்லாத ஆங்கில சிங்களப்பத்திரிகையாளர்களின் பிரதிபலிப்பாகவும் இருப்பதை அவதானிக்கமுடிகிறது.

இந்நிலைமை கடந்த ஒருவருடகாலத்திற்கு முன்னர் இருந்த நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும் சுமார் ஒரு வருடகாலத்திற்கு முன்னர் இதே காலப்பகுதியில் இப்பத்திரிகைகள் தமிழரின் தேசிய இன விடுதலைப்போராட்டம் ஆயுத ரீதியில் ஒடுக்கப்படுவதற்கான கால எல்லையை

# துட்ட கைமுனுக்களைப் போற்றும் மனநிலையில் மாறுதல் வேண்டும்

**- பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்**

(கொழும்பு)

பிரச்சினைகளை உரிய காலத்தில் தீர்க்காமல் அவற்றினை ஒத்திப் போடுவதினால் தீர்வு மேலும் சிக்கலாகுமே தவிர தீர்வு நோக்கிய பாதைக்கு இட்டுச் செல்ல வழிவகுக்காது அதிகாரப் பரவலாக்கல் முறை மூலமோ அல்லது தாராண்மை முறையிலோ அல்லது ஏதோ ஒரு பெயரில் இந்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை கொழும்பு கிராண்ட் ஒரியண்டல் ஹோட்டலில் இடம்பெற்ற வேற்றுமைகளுக்கிடையில் ஒற்றுமை தேசிய தனித்துவத்தை நோக்கி என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பேராசிரியர் ஜீ எல் பீரிஸ் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இன்றுஉலகெங்கும் உள்ள பல நாடுகளிலும் பலமுனைகளிலும் பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

இன்று நமக்கு முன் பூதாகாரமாக இருப்பது தேசிய இனப்பிரச்சினை இதற்கு மூக்கிய காரணிகள் வரலாற்றுக் காலம் முழுவதும் இனங்களுக்கிடையே தவறான கருத்துக்களும் எண்ணங்களும் விதைக்கப்பட்டமையே ஆகும். அத்துடன் கலாசார தனித்துவத்துக்கு அங்கீகாரம் வழங்கப்படாமையுமாகும் இங்கு இப்போதும் சரித்திரத்தை சரியாகப் போதிப்பதில்லை. குறிப்பாக துட்டகைமுனு மன்னன் தமிழர்களை தோற்கடித்தான் என்பதற்காக போற்றப்படுகின்ற நிலை மாறவேண்டும் எனத் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய கலாநிதி ராதிகா குமாரசாமி பேசுகையில் பொருத்தமான கல்விக் கொள்கை ஒன்றின் மூலமே இனவாத சிந்தனைகளை மாற்ற முடியும் பல்லின மக்கள் சமூகங்களும் ஒன்றையொன்று மதித்து நேசிக்கும் விதத்தில் பாடசாலை பாடவிதானங்கள் அமைய வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதில் கலந்து கொண்ட ஏ. எம். எம். சகாப்தீன் உரை நிகழ்த்தும் போது தனிச்சிங்கள மொழிச் சட்டம் திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் பல்கலைக்கழக அனுமதி முறையில் கோட்டா முறை பெரும்பான்மையினர் மீது சிறுபான்மையினருக்கு சந்தேகத்தினை ஏற்படுத்தியது. இப்படியாக இடையில் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளே இனங்களுக்கிடையில் சந்தேகங்களை தோற்றுவித்ததாக தெரிவித்தார்.

இந்திய வம்சாவளியினரை

# நாடுகடத்தும் திட்டத்தை அமுல்படுத்த விடக்கூடாது

**- டி. அய்யாத்துரை**

இலங்கை அரசாங்கம் இந்திய வம்சாவளி மக்கள் 84 000 பேரை நாடு கடத்த திட்டம் கொண்டு வந்துள்ளது. அரசாங்கம் இவ் 84,000 பேரையும் நாடு கடத்தும் திட்டத்தை அமுல்படுத்த முனைந்தால் அதனை தனக்கேற்பட்ட பிரச்சினை அல்ல என்று ஒதுக்கி விடாமல் தொழிலாளர்கள் சங்க வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு அரசாங்கத்தின இத் திட்டத்தை தடுப்பதோடு சம்பந்தப்பட்ட மக்களுக்கு பிரஜாவுரிமை பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் டி. அய்யாத்துரை அக்கரபத்தனை பெல்மோரல் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் இந்நாட்டுக்காக 200 ஆண்டுகளாக உழைத்த தோட்டத் தொழிலாளர்கள் நாடு கடத்தப்பட்டனர். இது பாதகமான செயலாகும் என்பதுடன் சர்வதேச மனித உரிமைகளை மீறிய செயலுமாகும். இந்த மக்களுக்கு இந்தியாவிலும் உருப்படியானபுனர் வாழ்வு நடவடிக்கை இல்லாமல் வீதிகளிலும் அகதிமுகாம்களிலும் பிச்சைக்காரர்போல் திரிகின்றனர்.

பிரஜாவுரிமை வழங்க

# விசாரணை செய்வது சட்டத்திற்கு புறம்பானது

**- இ. தொ. கா அறிக்கை**

(கொழும்பு)

பிரஜாவுரிமை வழங்குவதற்காக இன்றும் இந்திய வம்சாவளியினரை விசாரணைகள் செய்வது தற்போதைய நடைமுறைச் சட்ட திட்டங்களுக்கும் ஜனாதிபதியின் கொள்கைக்கும் முரணானது எனக் குறிப்பிட்டு இ. தொ. கா. உப தலைவர் எல். இராஜ- அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்அறிக்கையில் இந்தியா செல்ல விண்ணப்பித்து கடவுச் சீட்டு பெற்றவர்களைத் தவிர ஏனைய அனைத்து இந்திய வம்சாவளியினரும் இலங்கைப் பிரஜைகளே. எனவே இவர்களை விசாரணை நடத்தி சத்தியப் பிரமாணம் பெற்று பிரஜாவுரிமைப் பத்திரம் வழங்குவது தற்போது அவசியமில்லை இந்நிலையில் தாம் இந்தியக் கடவுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதனைச் சத்திய கடதாசி மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இதனை ஜனாதிபதியிடம் அமைச்சர் தொண்டமான் எடுத்துக் கூறி அதுவே நடைமுறையிலும் இருந்தது

ஆனால் தற்போது இதற்கு முரண்பாடான செயல்களில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும், ஆணையாளர்களும் ஈடுபடாது இருக்கும்படி கேட்டுள்ளார்.

மேலும் இப்பிரஜா உரிமை விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முரண்பாடான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால் இந்திய வம்சாவளியினர் மத்தியில் நம்பிக்கை இழக்கச் செய்யும் செயலாகவே இருக்கும் என அவ்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

(சுன்னாகம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரின் சன்மார்க்க நுண்கலை மன்றத்தினரால் சித்திர, சிற்பக் கருத்தரங்கொன்று கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்குத் தொடரில் பல அறிஞர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். "கலைக் கோட்பாடுகள்", "பாரம்பரிய ஓவியக்கலை", "உயிரோவியம்" "ஐரோப்பியக் கலை வரலாறு", இந்திய ஓவியம்" என்னுந் தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெற்றன.

இறுதிநாள் நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் திரு, சபா. ஜெயராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார். (11)

ஜெயலலிதா அரசுக்கு எதிராக

# தமிழகம் தழுவிய எதிர்ப்பு டாக்டர் சுவாமி திட்டம்

(சென்னை)

ஜெயலலிதா ஆட்சிக்கு எதிராக தமிழகம் எங்கும் இயக்கம் நடத்த ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி முன்வந்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை உட்பட நான்கு குற்றச்சாட்டுக்களை ஜெயலலிதா அரசு மீது சுமத்தி வரும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அமரர் எம். ஜி ஆர் உயிருடன் இருந்த போது ஜெயலலிதா மற்றவர்களோடு நடத்திய தொலைபேசி உரையாடல்களை வெளியிட வேண்டுமென மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பத்திரிகை சுதந்திரம் நசுக்கப்படுதல், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடல், நிர்வாகத்திறமையின்மை, விடுதலைப் புலிகள் மீதான கண்காணிப்பை குறைத்தமை போன்றவையே டாக்டர் சுவாமி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் ஆகும்.

# குவைத்தில் பெண்கள் வாக்குரிமை கோருகின்றனர்

# போர்க் குற்றங்கள் விசாரிக்க ஐ.நா.சபைகமிஷன் அமையும்

(நியூயோர்க்)

பொஸ்னியாவில் போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளை நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை முதல் தடவையாக கமிஷன் ஒன்றை அமைத்துள்ளது செர்பியா, குரோசியா மற்றும் பொஸ்னியா கர்சகோவினாவின் முஸ்லிம் படைகள் சிவிலியன்களுக்கு எதிராக இழைத்த கொடுமைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள்குறித்து இக் கமிஷன் விசாரணை நடத்தவுள்ளது.

பொஸ்னியாவின் வடக்குப் புறத்தேயிருந்த நகரமொன்றைக் கடுமையான சண்டைக்குப் பின்னர் செர்பியப் படைகள் கைப்பற்றியிருப்பதாக சொல்லப்படுகிறது.

# துருக்கி நாசகாரிக் கப்பலை அமெ. ஏவுகணை தாக்கியது

(வாஷிங்டன்)

ஏசியன் கடலில் நேட்டோ கடற்படை ஒத்திகையின் போது அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் சரடோகாவிலிருந்து தவறுதலாக ஏவப்பட்ட ஏவுகணைஒன்று துருக்கி

இரண்டு ஏவுகணைகள் ஏவப்பட்டன என்றும், அவற்றில் ஒன்று துருக்கி நாசகாரியைத் தாக்கியதாகவும் கூறப்படுகின்றது

விமானம் தாங்கிக் கப்பலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் நாசகாரிக்கப்பல் இருந்த

பாடுசெய்யப்பட்ட மக்கள் பேரணி ஒன்றின் படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும், கட்டுரையின் இறுதியில் இவ்வருட ஆரம்பத்தில் இருந்து மாதாந்த ரீதியில் யுத்தத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கையும் (அரசாங்க தகவல் அடிப்படையில்) வெளியிடப்பட்டுள்ளது.

அதாவது யுத்தத்தில் சிறிலங்கா இராணுவத்தின் இழப்புக்கள் குறித்து சிங்களப்பத்திரிகையாளர்கள் அங்கலாய்க்க தொடங்கியுள்ளனர். இது தனியாக சண்டே ரைம் சினுக்குரிய தன்மையாக மட்டும் தெரியவில்லை. அரசகட்டுப்பாடில் இல்லாத ஆங்கில சிங்களப்பத்திரிகையாளர்களின் பிரதிபலிப்பாகவும் இருப்பதைஅவதானிக்கமுடிகிறது

இந்நிலைமை கடந்த ஒருவருடகாலத்திற்கு முன்னர் இருந்த நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும் சுமார் ஒரு வருடகாலத்திற்கு முன்னர் இதே காலப்பகுதியில் இப்பத்திரிகைகள் தமிழரின் தேசிய இன விடுதலைப்போராட்டம் ஆயுத ரீதியில் ஒடுக்கப்படுவதற்கான கால எல்லையை நிர்ணயம் செய்துகொண்டிருந்தன. அக்காலப் பகுதியில், கொழும்பிலிருந்து வெளிவந்த பத்திரிகைகள் யாவும் விடுதலைப் புலிகளின் முதுகெலும்பு உடைக்கப்பட்டு விட்டதாகவே எழுதிவந்தன. ஐலண்ட் பத்திரிகையின் கேலிச்சித்திரக்காரரான விஜயசோமா தொடர்ச்சியாக கீறிய கேலிச்சித்திரங்களில் கால்கள், கைகள் உடைந்த நிலையில் எழுந்து நடக்க முடியாத புலியொன்று கிடப்பதாகவே விடுதலைப்புலிகள் அமைப்பை உருவகம் செய்தார் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஒருசமாதான உடன்படிக்கை வராதா எனப் புலிகள் ஏங்குவதாகவும் அவர் கற்பனை விரிந்து சென்றது.

ஆனால், இன்று ஒருவருடத்தின் பின்னர், போர் வெல்ல முடியாது என்பதையும், காலம் செல்லச்செல்ல போர்விஸ்தரித்துச்செல்வதற்கான வாய்ப்பு அதிகரிப்பதாகவுள்ளதேயொழிய கட்டுப்பாட்டிற்குள் வருவதாகத் தெரியவில்லை என்பதையும் சிங்களப்பத்திரிகையாளர்கள் உணரவோ அன்றி ஏற்றுக் கொள்ளவோ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது

மேலும் போரினால் ஏற்படும் பாதிப்புக்கள் தனியாக தமிழருக்கு மட்டுமல்ல சிங்களவர்களையும் பாதிக்கும் என்பதையும், இதனால் சிங்கள தேசத்தின் அமைதியான வாழ்க்கைக்குப் பங்கம் வரும் என்பதையும் சிங்களப் பத்திரிகையாளர்கள் அன்று உணரத் தவறியிருந்தனர். உணர்ந்திருந்தவர்களும் தெரியப்படுத்தவில்லை.

இதேபோன்றே 1977ஆம் ஆண்டு இலங்கையில்அவசரகாலச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட போது இச்சட்டம் தமிழ்மக்களுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்படும் என சிங்களப் பத்திரிகைகளும், சிங்கள அரசியல்வாதிகளும் கருதினர் ஆனால் பின்னர் நிலைமைமாற்றமடைந்து இன்று தென்னிலங்கையையும் பாதிக்கும் ஆனால், நீக்கமுடியாத தொருசட்டம் என்ற நிலையை அடைந்துள்ளது. இதே போன்றே பயங்கரவாத தடைச்சட்டமுமாகும். இதற்காகப் பின்னர் வருந்த வேண்டி வந்தது.

ஆனால்யுத்தம் மேற்கூறப்பட்ட சட்டங்களைப் போல் நேரடியாகப் பாதிக்கவில்லையாயினும், அதே அளவு சிலவேளை அதைவிட கூடுதலான பாதிப்பைஏற்படுத்தியுள்ளது ஆனால்இவ்வாறானதொரு நிலைமை உருவாகும் என முன்கூட்டியே பத்திரிகையாளார்களால்உணரமுடியாமல் இருந்ததென்றால் அது ஆச்சரியமான தொன்றே இதே வேளை அவர்கள் உணர்ந்தார்களோ இல்லையோ அவர்கள் அதை வெளிக் கொண்டுவரவில்லை பத்திரிகைகள் சிங்கள மக்களுக்குப் போலி நம்பிக்கைகளை வளர்ந்தன அதாவது விரும்பியோ விரும்பாமலோ அவர்களிடம் குடி கொண்டிருந்த பௌத்த பேரினவாத சிந்தனை இவற்றை வெளிக் கொண்டுவருவதற்குத் தடையாக இருந்தது.

## தமிழகம் தழுவிய எதிர்ப்பு

# டாக்டர் சுவாமி திட்டம்

(சென்னை)

ஜெயலலிதா ஆட்சிக்கு எதிராக தமிழகம் எங்கும் இயக்கம் நடத்த ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி முன்வந்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை உட்பட நான்கு குற்றச்சாட்டுக்களை ஜெயலலிதா அரசு மீது சுமத்தி வரும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அமரர் எம். ஜி ஆர் உயிருடன் இருந்த போது ஜெயலலிதா மற்றவர்களோடு நடத்திய தொலைபேசி உரையாடல்களை வெளியிட வேண்டுமென மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பத்திரிகை சுதந்திரம் நசுக்கப்படுதல், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடல், நிர்வாகத்திறமையின்மை, விடுதலைப் புலிகள் மீதான கண்காணிப்பை குறைத்தமை போன்றவையே டாக்டர் சுவாமி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் ஆகும்.

# குவைத்தில் பெண்கள் வாக்குரிமை கோருகின்றனர்

(குவைத்)

குவைத்தில் ஆண்களுக்கு மட்டும் வாக்குரிமை அளித்து நடைபெற்ற தேர்தலை எதிர்த்து பெண்கள் குரல் எழுப்பியுள்ளனர்

குவைத்தில் இருக்கும் அல் பத்தா பெண்கள் கழகத்தைச் சேர்ந்த அறுபதுக்கும் மேற்பட்ட பெண்கள், வாக்களிக்கும் உரிமையும், தேர்தல்களில் போட்டியிடும் உரிமையும் தமக்குத் தரப்பட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுள்ளனர்

ஈராக்கின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட குவைத்தில் முதல் தடவையாக அண்மையில்தான் பலகட்சிகளும் பங்கு கொண்ட தேர்தல் நடத்தப்பட்டது தெரிந்ததே. இத் தேர்தலில் இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட சுமார் 81,400 ஆண்கள் மட்டுமே வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர் எனினும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவும், வேட்பாளராக போட்டியிடுவதற்கும் பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆண்களோடு சரிசமமான கல்வி அறிவைப் பெறும் வாய்ப்பு உள்ள போதும் அரசியலில் ஈடுபடும் உரிமை இல்லை என்று சட்டத்தரணியும், பெண் உரிமை இயக்க உறுப்பினருமான பத்தியா, அல்-அவாதி கூறியுள்ளார்.

### ஆயுதங்களின் துணையுடன்

# வாகனக் கடத்தல்கள் அமெரிக்காவில் அதிகரிப்பு

அமெரிக்காவில் ஆயுதம் ஏந்தியோர் கார்களைக் கடத்திச் செல்வது அதிகரித்து வருவதாகவும் அதனால் அதனை தடுக்கும் வகையில் இவ்வாறான கார்க் கடத்தல்களை பெரிய குற்றமாகக் கருதித் தண்டனை விதிக்கக் கோரும் ஒரு மசஜரை அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை நேற்று முன்தினம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இத்தகைய குற்றம் புரிவோருக்கு பதினைந்து வருட சிறைத் தண்டனை விதிக்கவும், காரைக் கடத்தி ஓடும் போது எவராவது உயிரிழந்தால் ஆயுள்கால தண்டனையும் விதிக்கப்பட உள்ளது

பிரதிநிதிகள் சபையில் குரல் ஒட்டு மூலம் நிறைவேற்றிய பின் தற்போது செனட் சபையின் அங்கீகாரத்திற்காக விடப்பட்டுள்ளது.

# இந்தியாவில்கலவரம் அடக்க விசேடபடைப்பிரிவு அமைப்பு

(டில்லி)

இந்தியாவில் வகுப்புக் கலவரங்களை சமாளிப்பதற்காக அமைக்கப்பட்ட றப்பிட் ஆக்ஷன் போர்ஸ் எனப்படும் விசேட அதிரடிப்படையினர் நேற்று முதல் செயற்படத் தொடங்கியுள்ளனர்

உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்றுக்காலை புதுடில்லியில் இப் படைப் பிரிவை உத்தியோக பூர்வமாக தொடக்கி வைத்தார்.

மத்திய றிசேர்வ் பொலிஸ் படையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எண்பதாயிரம் பேரைக் கொண்டதாக இப் படை அமைக்கப்பட்டுள்ளது.

வகுப்புக்கலவரங்கள் தோன்றக்கூடும் என எதிர்பார்க்கப்படும் புதுடில்லி, ஹைதராபாத் ஆகமதாபாத், வாரணாசி, அல்லீகட், காரியாபாத், ஜெய்ப்பூர், மரட், அலகாபாத, தர்பன்சா ஆகிய நகரப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும்

மத்திய றிசேர்வ் படையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்க இருக்கும், இப் படைப்பிரிவு தேவைக்கேற்ப பின்னர் விரிவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ. நா. வுக்கான

# விஜயம் ரத்து

(ஜெனீவா)

கம்பூச்சிய சுப்ரிம் தேசிய கவுன்சிலின் தலைவரான இளவரசர் சிஹானூக் ஐ நா. வுக்கான தனது விஜயத்தை ரத்துச் செய்திருப்பதாக அறிவித்துள்ளார். சீனாவில் தற்போது வசித்து வரும் எழுபது வயதான இளவரசர் சிஹானூக் சுகவீனம் காரணமாகவே இந்த முடிவை எடுக்க நேரிட்டதாக கூறியுள்ளார்.

# திரிபுராவில் பொலிஸ் மீது தாக்குதல்

(அகர்த்தலா)

திரிபுராவில்பொலிஸ்நிலையமொன்றின் மீது தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதல் ஒன்றில் நான்கு பொலிசார் உயிரிழந்துள்ளதாகவும், ஐந்து பேர் காயமடைந்துள்ளதாகவும். பெருமளவு ஆயுதங்கள் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

தீவிரவாதிகள் தரப்பில் ஐம்பது பேர் கலந்து கொண்ட இத்தாக்குதல் சம்பவம் அரை மணி நேரமே நடைபெற்றது என்றும், இதில் ஒரு தீவிரவாதி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

(நியூயோர்க்)

பொஸ்னியாவில் போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளை நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை முதல் தடவையாக கமிஷன் ஒன்றை அமைத்துள்ளது செர்பியா, குரோசியா மற்றும் பொஸ்னியா கர்சகோவினாவின் முஸ்லிம் படைகள் சிவிலியன்களுக்கு எதிராக இழைத்த கொடுமைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள்குறித்து இக் கமிஷன் விசாரணை நடத்தவுள்ளது.

பொஸ்னியாவின் வடக்குப் புறத்தேயிருந்த நகரமொன்றைக் கடுமையான சண்டைக்குப் பின்னர் செர்பியப் படைகள் கைப்பற்றியிருப்பதாக சொல்லப்படுகிறது.

# துருக்கி நாசகாரிக் கப்பலை அமெ. ஏவுகணை தாக்கியது

(வாஷிங்டன்)

ஏசியன் கடலில் நேட்டோ கடற்படை ஒத்திகையின் போது அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் சரடோகாவிலிருந்து தவறுதலாக ஏவப்பட்ட ஏவுகணைஒன்று துருக்கி நாசகாரிக் கப்பலைத் தாக்கியதால் 6 பேர் கொல்லப்பட்டனர் எனஅறிவிக்கப்படுகின்றது

குறைந்தது ஒன்று அல்லது இரண்டு ஏவுகணைகள் ஏவப்பட்டன என்றும், அவற்றில் ஒன்று துருக்கி நாசகாரியைத் தாக்கியதாகவும் கூறப்படுகின்றது

விமானம் தாங்கிக் கப்பலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் நாசகாரிக்கப்பல் இருந்த போதே தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தான் இராணுவம் சிந்துவிலிருந்து வெளியேறும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் இராணுவப்படையினர் முகாம்களுக்கு திரும்பிச் செல்லத் தயாராகி வருகின்றனர் என்று இராணுவத்தளபதி அஸீப் நவாஸ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சிந்து மாகாணத்தில் எமது பணி முடிந்துவிட்டது இனி அமைதியை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு எனத் தெரிவித்தார்.

# மணிப்பூர் சபாநாயகரின் கடவுச்சீட்டு பறிமுதல்

மணிப்பூர் சட்டப்பேரவையின்சபாநாயகர் டாக்டர் எச் போடோபாபு சிங்கின் கடவுச் சீட்டை மத்திய அரசாங்கம் பறிமுதல் செய்துள்ளது.

கடந்த திங்கள் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் வெளியுறவு அமைச்சகம் தமக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கடவுச் சீட்டு பறிமுதல் செய்யப்பட்டதையும், வெளிநாட்டுக் கரன்ஸி பெறுவது தடுக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியிருப்பதாக கூறினார்.

அத்துடன் கடந்த மாதம் இருபத்தைந்தாம் திகதியன்று இந்திய உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றை ஏற்றுச் செயற்படமறுத்தமைக்காகவே தமக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் கூறியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பஹாமாஸ் நாட்டில் நடைபெற்றுவரும் காமன்வெல்த் சபாநாயகர்கள் மாநாட்டில் பாபுசிங் கலந்து கொள்ள இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மியான்மாரில் கிளர்ச்சிப் படைக்கு எதிரான

# இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுமாம்

மியான்மார் நாட்டில் நிலவும் இனப்பூசல்களுக்கு தீர்வு காணும் ஒரு முயற்சியாக கிளர்ச்சிப் படைகளுக்கு எதிரான எல்லா இராணுவ நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படுவதாக மியான்மார் அரசு அறிவித்துள்ளது.

அந் நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் பேசும் போது இதனை தெரிவித்தார். அத்துடன் அந் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மனித உரிமைகள் பற்றி மேலை நாடுகள் எழுப்பி வரும் கண்டனங்களையும் அவர் நிராகரித்தார்.

ஈழநாதம்

# யாழ். கல்வித்திணைக்களம் ஆங்கிலத்தில் கடிததொடர்பு

## -தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

மத்திய அரசு ஆசிரியர் நியமனக் கடிதங்களை தனித் தமிழில் அனுப்பும் அதே வேளை யாழ். மாவட்ட கல்வித் திணைக்களம் நியமனக் கடிதங்களை தமிழல்லாத மொழியிலே விழா எடுத்து வழங்குகின்றது. யாழ். கல்விப் பணிப்பாளரின மேற்படி செயலை வன்மையாகக் கண்டித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம், தமிழ் மொழி அமுலாக்கத்தை முழுமையாகச் செய்ய முடியுமா முடியாதா என ஒரு வார காலத்தினுள் சங்கத திற்கு அறிவிக்குமாறு வலியுறுத்தி யாழ். கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கத்திற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். ஒருவார காலத்தினுள் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் அதன் விளைவுகளையும் பணிப்பாளர் ஏற்றுக் கொள்ளவேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

இது தொடர்பாக பொதுச் செயலாளரால் அனுப்பப் பட்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

1. இலங்கை குடியரசில் யாப்பிற்கமைவாகவும், அரசின் அரசகரும மொழி அமுலாக்கக் கொள்கையின் அடிப்படையிலும், யாழ்ப்பாண மாவட்டதத்திற்குரிய நிர்வாக மொழி தமிழ் மொழியே யாகும். எனவே திணைக்களம் நிர்வாக மொழியாகவும் கடிதத் தொடர்புக்குரிய மொழியாகவும் தமிழ் மொழியையே பயன்படுத்த வேண்டும்.


2. பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தமிழ் மொழி உரிமைக்காக உயிர்த் தியாகம் செய்து கொண்டிருக்கும், இன்றைய நிலையில், தங்களின் அக்கறை இன்மையினால், யாப்பு ரீதியாக வழங்கப்பட்ட உரிமையையும் யாழ். மாவட்ட மக்கள் அனுபவிக்க முடியாதிருக்கின்றது

3. தங்கள் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளர், போதிய தட்டச்சாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டச்சு இயந்திரங்கள் ஆகியவற்றுடன் திணைக்களத்தில் வேலை செய்யும் சகல ஊழியர்களும் தமிழில் நல்ல தேர்ச்சி உடையவர்கள் போன்ற சகல வளங்கள் இருந்தும் தமிழ் மொழி அமுலாக்கம் இல்லையென்றால் அதற்கான காரணம் தங்களின் அக்கறையின்மையே ஆகும்.

4. இவ்வளவு வளங்கள் இலங்கையில் வேறு எந்த திணைக்களத்திலும் இல்லை என்பதுடன் தமிழ் மொழி அமுலாக்கத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் அமுல் நடத்த முடியாதெனில் வேறு எங்கும் நடாத்துவது சாத்தியமில்லை.

5. எனவே தாங்கள் தமிழ் மொழி அமுலாக்கத்தை முழுமையாக நடாத்த முடியுமா அல்லது முடியாதா என்பதற்கான பதிலை கடிதம் கிடைத்த ஒருவாரத்திற்குள் தருமாறு கோருகின்றோம், சாதகமான பதில் ஒரு வாரத்தினுள் கிடைக்காதவிடத்து அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு தாங்களே பொறுப்பேற்க வேண்டும்

## 90-ம் நாள் நினைவஞ்சலி



# தொழிற்சங்கவாதிக்கு இடமாற்றம்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர் தொழிற்சங்கம் ஒன்றைச் சேர்ந்த தொழிற்சங்கவாதி ஒருவர் இடம் மாற்றம் செய்யப்படவுள்ளார், இதற்கான உத்தரவையாழ், பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா, சுந்தரலிங்கம் வழங்கியுள்ளதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன, இடமாற்றக் கடிதம் இன்று அனுப்பிவைக்கப்படும் என்று அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன,

---

மாணவர் கழகத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில்; உலகம் இன்று விஞ்ஞான, தொழில் நுட்ப ரீதியாக பலமடங்கு வளர்ச்சியடைந்து செல்கின்றது நாம் வளர்ச்சியடையவ்லலை குறிப்பாக தமிழீழ மாணவரின் கல்வித் தரம், விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு அதிக வளர்ச்சியடையவில்லை. எனவே அறிவியல் துறையின் ஆர்வம் கொண்ட மாணவர்களை வளர்ப்பதற்கு மாணவர் அறிவியல் கழகம் தொழிற்படும் மாணவர்களாகிய நீங்கள் மக்கள் மனங்களில் விஞ்ஞான மனப்பான்மையை வளர்ப்பதற்கு முனையவேண்டும் விஞ்ஞான, தொழில் நுட்ப ரீதியாக சிந்தனை செய்து இந்த மண்ணின் தேவைகளை இனம் கண்டு தேவைகளையொட்டி புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

வளர்ந்து வரும் இளம் மாணவர்களை விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு உடையவர்களாக வளர்க்கவேண்டும் என்பதே எமது தேசியத்தலைவர் அவர்களின் பெரும் விருப்பம் ஆகும். இதனடிப்படையிலேயே ''மாணவர்அறிவியல் கழகம்'' உருவாக்கப்படுகின்றது. என்றும் கூறினார்.

முள்ளியவளை, வற்றாப்பளை றோ. க. த., குமுழமுனை அ. த. க. க., செம்மலை மகாவித்தியாலயம்,

# புலோலிப் பகுதி இளைஞரை பொலிசார் தேடுகின்றனராம்

சிறிலங்கா பொலிஸ் அதிபர் தியோபிலஸ் கொலை தொடர்பாக யாழ்ப்பாணம் புலோலிப் பகுதியைச் சேர்ந்த கனகலிங்கம் விஜயகுமார் என்பவரை பொலிசார் தேடி வருகின்றனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யச் சென்ற வேளையில் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டவர் எனப்படும் யோகரத்தினம் என்னும் இளைஞரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றவர் இவரே என்று பொலிசார் கருதுகின்றனர். புலோலி கிழக்கு பண்ணைக்கட்டி என்னும் இடத்தைச் சேர்ந்த விஜயகுமார் கடந்த சில மாத காலமாக வெள்ளவத்தை பெளத்தலோக மாவத்தையில் வசித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

# கியூபாவில் தூதரகத்தை மூடிவிட சிறிலங்கா முடிவு

(கொழும்பு)

கியூபாவில் இருக்கும் சிறிலங்கா தூதரகம் விரைவில் மூடப்படலாம என்று நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

பொருளாதார செலவினங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாகவே கியூபாவுக்கான தூதரகம் மூடப்படுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் அல்லது அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இது நடைமுறைக்கு வரலாம் என்றும், மேலும் தெரியவந்துள்ளது

எனினும் ஹவானாவில் இருக்கும் சிறிலங்காத் தூதரகம் மூடப்படுவது சிறிலங்காவுக்கும், கியூபாவுக்கும் இடையிலான உறவில் சில பின் விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் தற்போதைய நல்லுறவில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் நம்பப்படுகிறது.

## மகாராஜா நிறுவன தொலைக்காட்சி

(கொழும்பு)

மகாராஜாதொலைக்காட்சி நிறுவனத்தினரால் ஒளிபரப்பப்படும் எம்.டி.வி தொலைக் காட்சிஇம்மாதம் பதினைந்தாம்திகதிநாடுமுழுவதிலும்உள்ள தொலைக்காட்சித் திரைகளில் தெரியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

---

காவல்துறை நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா, மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி ஜெயா யாழ் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இவ்விழாவில் யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன், யாழ். மாவட்ட தளபதி திரு. செல்வராசா வடமராட்சி இராணுவத் தளபதி திரு செல்வம், யாழ் மாவட்ட கடற்புலிகள் உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. புவியரசன், வல்வெட்டித்துறை காவல் நிலையப் பொறுப்பாளர் திரு. எஸ் கதிர்காமநாதன் மற்றும் பிர

## நளினி, முருகன் சேலம் சிறைக்கு மாற்றம்

ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டு செங்கல்படடு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நளினி, முருகன் உட்பட இருபத்துநான்குபேரும் சேலம் மத்திய சிறைக்கு மாற்றப் பட்டு உள்ளனர் சேலம் மத்திய சிறையில் இவர்கள் தனித் தனி அறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகசேலம் மத்திய சிறைச்சாலை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

---

படையினர்

புலிகள் கண்ணிவெடியை அகற்றியபின் அவ்விடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

---

இனப்பிரச்சினை

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைத்தால் அதனை அரசியல் இலாபத்திற்காகபயன்படுத்தப்போவதில்லை யெனஅண்மையில்நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூறியிருந்தார். எனவே இந்தச் சந்தர்ப்பத்தை அரசுக்கு வழங்குவதே எதிரணிகளின் நோக்கம் எனவும் இக்கட்சி வட்டாரங்கள் தெரி

# ஐ நா. மனித உரிமை குழு கொழும்பு விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசிற்கு மனித உரிமைகள் மீறப்படாமல் இருப்பதற்குச் செய்யப்பட்ட பரிந்துரைகள் எந்தளவிற்குப் பின்பற்றப்படுகிறது என்பதை கண்டறிய ஐ. நா. மனித உரிமைகள் குழு கொழும்பிற்கு வந்துள்ளது.

கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற் போனவர்களைப் பற்றிவிசாரிக்கும் ஐ.நா.மனித உரிமைகள் குழுவின் இரண்டாவது சிறிலங்கா விஜயம் இது வாகும். இக்குழு முதல் முறை இங்கு விஜயம் செய்த போது மனித உரிமைகளைப் பேணுவது குறித்துச் சில பரிந்துரைகளை சிறிலங்கா அரசுக்கு வழங்கியிருந்தது.

ஜெனிவாவிலுள்ள ஐ. நா. சபையின் மனித உரிமைக் குழுவிற்கு கடந்த பெப்ரவரி மாதம் இக் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

1983இல் தமிழர் பிரச்சினையின் ஆரம்ப முதல், ஜே வி.பியின் கிளர்ச்சியை அரசு கடுமையாக ஒடுக்கியது வரை 12,000 பேர் சிறிலங்காவில் காணாமற்போய் இருப்பதற்குப் போதிய சான்றுகள் இருப்பதாக இக் குழு அதன் அறிக்கையில் காட்டியிருந்தது.

மனித உரிமை மீறலில் தாம் பார்த்த நாடுகளிலேயே சிறிலங்காதான் படுமோசமானது என்று இக்குழு கூறியிருந்தது.

அரசின் மனித உரிமைகள் நடவடிக்கைக்குழு வெளியிட்டுள்ள தரவுகளின் படி 7.000 பேர் வரை அவசரகாலச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக ஐ நா. குழு இன்னும் சில ஆலோசனைகளைவழங்கியது. சர்வதேச சட்டங்களுக்கு ஒப்பாக சிறிலங்கா சட்டங்கள் மாற்றப்பட வேண்டும் என்றும்,

குற்றம் சாட்டப்பட்டவர்கள்மீது நீதிமன்றத்தின் முன் வழக்குத் தொடரப்பட வேண்டும் என்றும் இக்குழு கூறியிருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் பிரதிநிதிகள் மூவர் மற்றும் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகளுமாக ஐந்து பேர் தற்போது கொழும்பு வந்துள்ளனர். இவர்கள் எதிர்வரும் பதினைந்தாம் திகதி வரை இங்கு தங்கியிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ள இவர்கள், வெளிநாட்டு அமைச்சர், பாதுகாப்பு செயலாளர், மனித உரிமை பற்றிய அதிகாரிகள் மற்றும் பலஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் சந்திக்க உள்ளனர்.

# மேஜர் முரளி நினைவு விளையாட்டுப் போட்டி

மேஜர்முரளி நினைவு விளையாட்டு போட்டிகளில் தாச்சிப் போட்டியின் இறுதிப் போட்டிகள் முத்துத்தம்பிமகாவித்தியாலய மைதானத்தில் இன்று காலை 9 00 மணிக்கு ஆரம்பமாக உள்ளது

இறுதிப்போட்டியில் ஆண்கள் பிரிவில் கைதடி கொத்தணி எதிர் நவாலி மகாவித்தியாலயம், பெண்கள் பிரிவில் மல்லாகம் கொத்தணி எதிர் மகாஜனாக் கல்லூரி என்பன விளையாடும்

மூன்றாவதுஇடத்திற்குஆண்கள் பிரிவில் குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க பாடசாலை எதிர் அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயம். பெண்கள் பிரிவில் மட்டுவில் மகாவித்தியாலயம் எதிர் அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயம் என்பன விளையாடும்

# கோதுமை மாவுக்கு கட்டுப்பாட்டு விலை நீக்கம்

(கொழும்பு)

கோதுமை மாவின் கட்டுப் பாட்டுவிலை நீக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் உலக சந்தையில் நிலவும் கோதுமையின் விலைகளுக்கு ஏற்பவே உள்ளூரில் மாவின் விலைகளும் நிர்ணயிக்கப்படும் என கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் தலைவர் ஆரிய சமரவீர தெரிவித்துள்ளார்.

கோதுமை மா இறக்குமதி செய்வதில் தொடர்ந்து கூட்டுறவு மொத்த விறபனவு நிலையமே ஏகபோக உரிமையைக் கொண்டிருக்கும்.

இலங்கைக்கு மாதம் சுமார்

---

மக்களை

பட்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

1. இலங்கை குடியரசில் யாப்பிற்கமைவாகவும், அரசின் அரசகரும மொழி அமுலாக்கக் கொள்கையின் அடிப்படையிலும், யாழ்ப்பாண மாவட்டதிற்குரிய நிர்வாக மொழி தமிழ் மொழியேயாகும். எனவே திணைக்களம் நிர்வாக மொழியாகவும் கடிதத் தொடர்புக்குரிய மொழியாகவும் தமிழ் மொழியையே

என்பதுடன் தமிழ் மொழி அமுலாக்கத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் அமுல் நடத்த முடியாதெனில் வேறு எங்கும் நடாத்துவது சாத்தியமில்லை.

5. எனவே தாங்கள் தமிழ் மொழி அமுலாக்கத்தை முழுமையாக நடாத்த முடியுமா அல்லது முடியாதா என்பதற்கான பதிலை கடிதம் கிடைத்த ஒருவாரத்திற்குள் தருமாறு கோருகின்றோம், சாதகமான பதில் ஒரு வாரத்

கள் மனங்களில் விஞ்ஞான மனப்பான்மையை வளர்ப்பதற்கு முனையவேண்டும் விஞ்ஞான, தொழில் நுட்ப ரீதியாக சிந்தனை செய்து இந்த மண்ணின் தேவைகளை இனம் கண்டு தேவைகளையொட்டி புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

வளர்ந்து வரும் இளம் மாணவர்களை விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு உடையவர்களாக வளர்க்கவேண்டும் என்பதே எமது தேசியத் தலைவர் அவர்களின் பெரும் விருப்பம் ஆகும். இதனடிப்படையிலேயே ''மாணவர் அறிவியல் கழகம்'' உருவாக்கப்படுகின்றது. என்றும் கூறினார்.

முள்ளியவளை, வற்றாப்பளை றோ. க. த., குமுழமுனை அ. த. க. க., செம்மலை மகாவித்தியாலயம், ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், நெடுங்கேணி மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும் மாணவர் அறிவியல் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைகளில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு உதவிப் பொறுப்பாளர் திரு. ச நாவண்ணன், முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. நவீனன் ஆகியோரும் உரையாற்றினர்.

தெரியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

### காவல்துறை

நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா, மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி ஜெயா யாழ். மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இவ்விழாவில் யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன், யாழ். மாவட்ட தளபதி திரு. செல்வராசா வடமராட்சி இராணுவத் தளபதி திரு செல்வம், யாழ் மாவட்ட கடற்புலிகள் உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. புவியரசன், வல்வெட்டித்துறை காவல் நிலையப் பொறுப்பாளர் திரு. எஸ் கதிர்காமநாதன் மற்றும் பிரமுகர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

உடுப்பிட்டி, தொண்டமனாறு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, கொற்றாவத்தை, இமையாணன், மண்டான், நவிண்டில் ஆகிய பகுதி மக்களின் தேவையை உணர்ந்து இந்நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. (82)

மத்திய சிறைச்சாலை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### படையினர்

புலிகள் கண்ணிவெடியை அகற்றியபின் அவ்விடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

### இனப்பிரச்சினை

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைமுன்வைத்தால் அதனை அரசியல் இலாபத்திற்காகபயன்படுத்தப்போவதில்லை யெனஅண்மையில்நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூறியிருந்தார். எனவே இந்தச் சந்தர்ப்பத்தை அரசுக்கு வழங்குவதே எதிரணிகளின் நோக்கம் எனவும் இக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினைக்காக அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமானால் அதனை அரசியல் இலாபத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது என உறுதி வழங்கவும் எதிரணிக்கட்சிகள் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தன.

காலை 9 00 மணிக்கு ஆரம்பமாக உள்ளது

இறுதிப்போட்டியில் ஆண்கள் பிரிவில் கைதடி கொத்தணி எதிர் நவாலி மகாவித்தியாலயம், பெண்கள் பிரிவில் மல்லாகம் கொத்தணி எதிர்

பாடசாலை எதிர் அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயம். பெண்கள் பிரிவில் மட்டுவில் மகாவித்தியாலயம் எதிர் அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயம் என்பன விளையாடும்

## கோதுமை மாவுக்கு கட்டுப்பாட்டு விலை நீக்கம்

(கொழும்பு)

கோதுமை மாவின் கட்டுப்பாட்டுவிலை நீக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் உலக சந்தையில் நிலவும் கோதுமையின் விலைகளுக்கு ஏற்பவே உள்ளூரில் மாவின் விலைகளும் நிர்ணயிக்கப்படும் என கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் தலைவர் ஆரிய சமரவீர தெரிவித்துள்ளார்.

கோதுமை மா இறக்குமதி செய்வதில் தொடர்ந்து கூட்டுறவு மொத்த விறபனவு நிலையமே ஏகபோக உரிமையைக் கொண்டிருக்கும்.

இலங்கைக்கு மாதம் சுமார் 45,000 தொன் மா தேவைப்படுகிறது, இந்த வருடத்தின் முதல் ஆறு மாதத்தில் கோதுமை மா இறக்குமதியினால் நான்கு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகவும் அரசாங்கம் மாவின் விலையினை ஐம்பது சதத்தினால் குறைத்திருப்பதால் நஷ்டம் மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்,

### மக்களை

களும் இருக்கலாம் என நீங்கள் கருதுகிறீர்களா என கேட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

பல வருடங்களாக நடாத்தப்படும் தாக்குதல்களினால் மக்கள் வெளியேறுகின்றார்கள். இதைத்தான் அரசு விரும்புகிறது போல் எனக்கு தெரிகிறது என மேலும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் அரசு தனது அபிப்பிராயங்களைச் சமர்பிக்காததில் இருந்து அவர்கள் தெரிவுக்குழு மீது வைத்திருக்கும் மதிப்பு புலனாகிறது என்றும் அவர் தெரிவித்தார்

### மேஜர்

இவர் இச் சாதனைக்காக தலைவரிடம் பரிசு பெற்றவராவார்.

இறுதியாக கட்டைக் காட்டு தாக்குதலின் வேவு அணியின் ஒரு பிரிவிற்கு பொறுப்பாக இருந்து அன்று நடைபெற்ற தாக்குதலில் விழுப்புண் அடைந்தார்

வீரச்சாவு அடைந்த மேஜர் கார்வண்ணனுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### கிளாலி

குண்டுகள் வீழ்ந்து வெடித்ததினால் மணலாறைச் சேர்ந்த ஏரம்பு தமிழ்ச்செல்வன்(வயது 30) பூநகரியைச் சேர்ந்த அழகரட்ணம் நாகலிங்கம் (வயது 34) ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் இதனபோது சிறுவன் ஒருவன் கையிலகாயமடைந்தநிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவங்களின் போது நல்லூர் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பத்திற்கு மேற்பட்ட படகுகள் பலத்த சேதமடைந்தன. (ச)


## 90-ம் நாள் நினைவஞ்சலி



2-ம் லெப்டினனட்

**ஜெயரூபன்** (நாயகன்)

சின்னத்தம்பி வசந்தகுமார் (ஆனந்தன்)

வன்னி மண்ணில் மலர்ந்தது 19-03 1975

செட்டிகுளம் வண்ணான்குள மண்ணில் மாவீரனானது 11-07-1992

வியாழக்கிழமைதனில் வெளிக்கிட்டாய் வீட்டைவிட்டு விடிவெள்ளி காணமுன் படுவெள்ளி ஆனாயோ. பள்ளிப் படிப்பைவிட்டு பாசறை தேடியவன் - பாரினில் தமிழீழம் படைக்கப் புலியாகமாறியவன். சீறும்புலியாகப்புயலெனவே பறப்பட்டு வேங்கை கூட்டத்தில் நீயுமொருவனாக வவுனியா, மணலாறு, ஆனையிறவு எனப் பல சமர்புரிந்து செட்டிகுளம் வண்ணான்குள இராணுவத்தின் முகாமைத் தகர்த்தெறிந்து ஈற்றிலே மாவீரனானாயோ நாயகன்.

இவருடன் மாவீரர்களான ஏழு வேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலி. இவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 08-10 1992 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரிகைகளில் எமது சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்

ஐயா, அம்மா, அண்ணாமார், அண்ணிமார், அத்தான்மார், அக்காமார், தங்கைமார், தம்பி, மருமக்கள், பேர்த்தி, உற்றார், உறவினர்கள்.

இல. 795,
அன்சார் வீதி, வட்டக்கச்சி (சி-5187)



2-ம் வருட நினைவு நாள்



டொமினிக்
**மரியசீலி**
பேபி

மலர்வு: 15-3-1985 உதிர்வு: 8-10-1990

இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக வியாழக்கிழமை 8-10-1992 இன்று காலை 5-45 மணிக்கு துக்கப்பாடற்பூசை.

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

தகவல்:
ஜேபுரம் - யே. டொமினிக் செல்வம் (3332)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வீரப்பிறப்பு; 8-4-1972



வீரச்சாவு; 9-9-1992

கப்டன் நந்தன்

[வெள்ளைச்சாமி சுரேஷ்குமார்]

நாச்சிக்குடா - சீனன்குடா - திருமலை.

உளம் மறக்குமோ?

திருமலையில் பிறப்பெடுத்தவன்!
செருக் களத்தினில் நெருப்பெடுத்தவன்!
வரும் பகைவரை முறியடித்தவன்!
வரிப் புலியெனத் திறன் படைத்தவன்!
இரு விழியிலும் கன லெடுத்தவன்!
இடி புய லெனச் சுழன்றடித்தவன்!
ஒரு மலை யென அடிபெயர்ந்து நீ
உயிர் விடுத்தனை! உளம் மறக்குமோ?

நினைவில் உருகும்
குடும்பத்தினர்

(சி/5188)


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**07-10-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6021

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

22-3379, 24-4334, 22-6666, 21-6579, 27-6439, 27-4404, 42-9326, 71-4984, 27-8999, 27-8515, 26-3250, 27-9756, 28-7560, 43-1857, 24-9938, 28-3233. 41-6933, 26-0786, 24-6448, 24-4560, 24-5967, 24-4361.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது